**Tamil Nadu Electricity Board Engineers' Sangam**
தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்
Regd. No. 124/MDS (Recognised)
(Affiliated to All India Federation of Power Diploma Engineers)
144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.
44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014
Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| Er. A.ANTONYPADOVARAJ | Er. V. ASHOKKUMAR | Er. R.BADRINARAYANAN |

பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

<u>க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.எண்.1/எண். 62 /தேதி 06.01.2016.</u>

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் – பேச்சு வார்த்தைகளில், ஒப்பந்தங்களில் கோரிக்கைகள் ஏற்றுக்கொண்டு – அறிவித்தபடி அமல்படுத்தாமல் உள்ளது – மாநில செயற்குழு கூட்ட தீர்மானம் – நேரடி நடவடிக்கைகள் – உரிய நடவடிக்கை – வேண்டுதல் தொடர்பாக.

பார்வை:
1. க.எண்.பொ.செ./த.மி.வா.பொ.ச/கோ.எண்.1/எண்.129/தேதி 06.02.2015.
2. க.எண்.பொ.செ./த.மி.வா.பொ.ச/கோ.எண்.1/எண்.131/தேதி 06.02.2015.
3. சங்க முறையீடு நாள் 20.02.2015.
4. க.எண்.பொ.செ./த.மி.வா.பொ. ச/கோ.எண்.1/எண். 140 / தேதி 20.02.2015.
5. நுழைவாயிற் கூட்டம் 25.02.2015.
6. க.எண்.பொ.செ./த.மி.வா.பொ.ச/கோ.எண்.1/எண்.143/தேதி 05.03.2015.
7. கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் – 17.03.2015.
8. க.எண்.பொ.செ./த.மி.வா.பொ.ச/கோ.எண்.1/எண். 152 /தேதி 17.03.2015.
9. வாரியத்துடனான பேச்சு வார்த்தை நாள் 16.03.2015.
10. வாரியத்தலைவருடனான பேச்சு வார்த்தை நாள் 19.03.2015.
11. மின்துறை அமைச்சருடனான பேச்சு வார்த்தை நாள் 19.03.2015.
12. சங்க பொறுப்பாளர்கள் கூட்ட தீர்மானம் நாள் 03.01.2016.

---

வணக்கம்.

மதிப்பிற்குரிய வாரியத்தலைவர் அவர்களின் தனிப்பட்ட கனிவான கவனம் வேண்டியும், உரிய நடவடிக்கை வேண்டியும் கீழ்காணும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>வாரியம் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகள்:</u>

- 14 ஆண்டுகள் இளநிலைப் பொறியாளர் / முதல் நிலையில் பணிமுடித்த அனைத்து (மின்னியல் / இயந்திரவியல் / பொதுவியல்) இளநிலைப் பொறியாளர்களுக்கும், உதவிப்

பொறியாளர் / பொதுவியலுக்கு வழங்கியது போன்றே எந்த மாற்றமுமின்றி, உதவி செயற் பொறியாளர் / சார்பு பதவிகள் வழங்கிட வேண்டும்.

- தாமதப்படுத்தப்பட்டு வரும் இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை, இளநிலைப் பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வுகள், உதவிப் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் உள்முகத்தேர்வுகள் உடனடியாக வழங்கிட வேண்டும்.
- City Section-களுக்கு வழங்கியது போன்றே வாரியத்திலுள்ள அனைத்து மின்விநியோக பிரிவுகளுக்கும் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் வழங்கிட வேண்டும்.
- அரசுத்துறைக்கு இணையான சம்பளத்தை வாரியத் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு வழங்கிட வேண்டும்.
- தொழிற்தீர்ப்பாயமும், சென்னை உயர்நீதி மன்றமும் அளித்திட்ட தீர்ப்பின்படி உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் இடையேயான பொதுப் பெயர் வழங்கிட வேண்டும்.
- வாரிய மறுசீரமைப்பு – முத்தரப்பு ஒப்பந்தத்தில் ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்து ஷரத்துக்களும் இடம் பெற்று பணியாளர்களுக்கு பாதுகாப்பு அளித்திட வேண்டும்.
- ஊர் மாறுதல்கள், பதவி உயர்வுகளில் வாரிய விதிமுறைகள் கடைபிடித்திட வேண்டும்.
- நீர்மின் திட்ட ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்டபடி அனைத்து பொதுவியல் உபகோட்டங்களுக்கும் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் (பொதுவியல்) பணி அனுமதி வழங்கிட வேண்டும்.

மேற்கூறிய கோரிக்கைகள் பலகட்ட பேச்சு வார்த்தைகளுக்கு பின்னர் பலமுறை ஏற்றுக்கொண்டும் அமல்படுத்தாததை விரைந்து அமல்படுத்திட மாநில பொதுக்குழு முடிவின்படி கடந்த 25.02.2015 அன்று தமிழகம் முழுவதும் நுழைவாயிற் கூட்டங்களும், 17.03.2015 அன்று சென்னையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து வாரியம் உதவி செயற் பொறியாளர் / சார்பு, பதவி உயர்வுகள் உள்ளிட்ட பல கோரிக்கைகளை உடனடியாக அமல்படுத்திடவும், பிற கோரிக்கைககளை ஆறு மாத கால அவகாசத்தில் அமல்படுத்திடுவதாகவும் தெரிவித்தது. மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும் கோரிக்கைகளை வாரியம் விரைந்து அமல்படுத்திடும் என உறுதியளித்தார்கள்.

9 மாதங்கள் கடந்த பின்பும் வாரியம் அறிவித்தபடி கோரிக்கைகளை அமல்படுத்தாமல் உள்ளதை ஆழ்ந்து பரிசீலித்த பொறியாளர் சங்க மாநில செயற்குழு, பட்டயப் பொறியாளர்களின் நியாயமான கோரிக்கைகளையும், கடுமையான உழைப்பையும், உணர்வுகளையும் வாரியம் தொடர்ந்து உதாசீனப்படுத்திவருவதை வருத்தத்துடன் பதிவு செய்வதுடன், மாநில பொதுக்குழு முடிவின்படி நேரடி நடவடிக்கைகளில் ஒத்தி வைக்கப்பட்ட "உண்ணாவிரதப் போராட்டத்தை" தொடர்ந்து நடத்திட ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

**தீர்மானம் எண்.2**

வாரியம் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை உடனடியாக அமல்படுத்திட 16.03.2015 மற்றும் 19.03.2015 ஆகிய தேதிகளில் ஒப்புக்கொண்டபடி விரைந்து அமல்படுத்தாமல் 9 மாதங்களுக்கும்மேலாக தாமதப்படுத்தி வருவதால் பட்டயப் பொறியாளர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டும், வஞ்சிக்கப்பட்டும் வருகின்றனர். எனவே வாரியமும், அரசும் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை உடனடியாக அமல்படுத்திட,

- **02.02.2016 அன்று தமிழகம் முழுவதும் நுழைவாயிற் கூட்டங்கள் நடத்திடவும்**
- **கோரிக்கைகள் அமல்படுத்திட மேலும் தாமதமானால், மாநிலப் பொதுக்குழு முடிவின்படி வருகின்ற மார்ச் மாதத்தில் சென்னையில் தமிழகம் தழுவிய "உண்ணாவிரதப் போராட்டம்" நடத்திடவும் மாநில செயற்குழு ஏகமனதாக தீர்மானிக்கிறது.**

பட்டயப் பொறியாளர்களின் நியாயமான கோரிக்கைகளை வாரியத்தலைவரும், அரசும் அளித்திட்ட உறுதியின்படி மேலும் தாமதமின்றி விரைந்து அமல்படுத்திடவும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தொழில் நல்லுறவை பாதுகாத்திடவும் வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

xx (signature) xx

( வி. அசோக்குமார் )
பொதுச் செயலாளர்.

நகல்

உறுப்பினர்கள் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
செயலாளர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தொழிலாளர் நல ஆணையர் / தமிழக அரசு.
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
தொழில் நல்லுறவு ஆலோசகர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.